தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியழாக்கிழமை, 1981 மார்ச் 5.

மாசி 22, ரௌத்திரி 2012, திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் **(டாக்டர் ம. பொ. சிவஞானம்)** அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு.

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்பன் இயற்கை எய்தியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் 26-2-1981 அன்று ஈரோட்டில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இந்த அவையில் ஏப்ரல் 1970 முதல் ஏப்ரல் 1976 வரை உறுப்பினராக இருந்தார். அவர் ஈரோடு ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், வெள்ளாளர் கல்வி-அறக்கட்டளைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு மேலவையின் சார்பில் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவ்வாறே உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS